**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மேட்டூர்**

**முன்னிலை** : N. கோபாலகிருஷ்ணன் B.Sc., B.L., நீதித்துறை நடுவர் எண்,2(மு.கூ.பொ), மேட்டூர்.

புதன்கிழமை, 2026ம் வருடம் ஜூலை மாதம் 29–ம் தேதி

குற்றவியல் பல்வகை மனு எண். **593/2026**

**(CNR No.TNSA180015782026)**

சத்யா (36)
க/பெ. முத்துசாமி, .... **மனுதாரர்/வழக்கு சொத்தின் உரிமையாளர்**

**–எதிர்–**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்
ஜலகண்டாபுரம் காவல் நிலையம்.
**குற்ற எண் .136/2026, ச/பி .12 TNG Act ......எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்**

இந்த மனுவானது, மனுதாரர் தரப்பில், பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 497–ன் படி, மனுதாரருக்கு சொந்தமான வழக்கு சொத்தை இடைக்கால பொறுப்பில் விடுவிக்கக்கோரி, **06.07.2026**–ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **V.P.மகேந்திரபிரபு** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில், கற்றறிந்த **அரசு தரப்பு வழக்கறிஞர் திருமதி.அனு ராதா,** அவர்கள் ஆஜராகியும், இந்த நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

1. இந்த மனுவானது மனுதாரர் அவருக்கு சொந்தமான போலீசாரால் கைப்பற்றப்பட்ட TN 30 DZ 1733 என்ற பதிவெண் கொண்ட Splendor + DRS வாகனத்தை குற்றச்சம்பவத்தில் பயன்படுத்தியதற்காக **ச/பி. 12 TNG ACT.** கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி மனுவில் மனுதாரரின் வாகனமானது தனது அன்றாட வேலைகளுக்கு அவசியம் தேவைப்படுவதாகவும், மேற்படி வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்கும் பட்சம் வழக்கு சொத்தை வழக்கு சம்பந்தமாக அழைக்கும் பொழுது, இந்நீதிமன்றத்திற்கு கொண்டு வரவும், ஆஜராகவும் தயாராக உள்ளதாகவும் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிர் மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கு சொத்தை நிபந்தனைகளின் பேரில் மனுதாரருக்கு வழங்க தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கற்றறிந்த வழக்கறிஞர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் மேற்படி வழக்கு சொத்தை நிபந்தனைகளின் பேரில் மனுதாரருக்கு வழங்க கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. எதிர் மனுதாரர் தரப்பில் எந்தவித வாதங்களும் முன்வைக்கப்படவில்லை. மேற்படி, கைப்பற்றப்பட்ட வாகனத்தை தன் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க கேட்டு மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

4. மேற்படி, மனுதாரர் மேற்கண்ட வாகனத்தின் நகல் பதிவு சான்றிதழை ஆய்வு செய்த போது, மேற்படி வாகனமானது மனுதாரர் பெயரில் உள்ளது. மேற்படி மனுதாரர் தகுந்த பிணையதாரர்களை ஆஜர் செய்வதாலும், மனுதாரரின் அன்றாட தேவைக்காக வேண்டியும், இந்த நீதிமன்றம் சான்று பொருளை ஒப்படைக்க வேண்டி உத்தரவிட்டால், மனுதாரர் ஒப்படைப்பதாகவும், மனுதாரர் சான்று பொருளை வேறு ஒரு நபருக்கு விற்கமாட்டார் என்று வாக்குறுதி அளித்துள்ளார்.

ஆகவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், கைப்பற்றப்பட்ட வழக்கு சான்று பொருளான TN 30 DZ 1733 என்ற பதிவெண் கொண்ட Splendor + DRS வாகனத்தை மனுதாரர் வசம் கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில், இடைக்காலமாக ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

i. **இந்த நீதிமன்றம் திருப்தி அடையும் வகையில், மனுதாரர் இரு பிணையதாரர்களை ஆஜர் செய்ய வேண்டும். மேலும் மனுதாரரும், ஒவ்வொரு பிணையதாரர்களும் தலா ரூ.50,000/-க்கான பிணையப்பத்திரம் இந்த நீதிமன்றம் முன்பாக எழுதிக் கொடுக்க வேண்டும்.**

ii. மனுதாரரும், பிணையதாரரும் சமீபத்தில் எடுக்கப்பட்ட 2 வண்ண புகைப்படங்கள் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து, பிணைய பத்திரத்தில் தங்களது இடதுகை பெருவிரல் ரேகையை பதிவு செய்யவேண்டும்.

iii. மேலும் பிணையதாரரும், மனுதாரரும், தங்களது அடையாளத்தை நிரூபிக்கும் பொருட்டு, அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் அடையாள அட்டையை தாக்கல் செய்யவேண்டும்.

iv. மேலும், மேற்படி வழக்கு சொத்தை வழக்கு முடியும் வரை மனுதாரர் யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது. நீதிமன்ற உத்தரவின் போது வழக்கு சொத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

v. வழக்கு சொத்தின் புகைப்படத்தை எடுத்து பாரத சாட்சிய சட்டம் 2023, பிரிவு 63ன் கீழ் சான்று செய்து அவற்றை CDயுடன் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

vi. மேலும் பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 , விதி 280-ன் படி நீதித்துறை படிவம் எண் 82ல் பஞ்சனாமா எழுதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டியது.

vii. **வாகனத்தின் அசல் பதிவு சான்றிதழை இந்த நீதிமன்றத்தின் பார்வைக்கு**

**ஒப்படைத்து சரிபார்த்த பின்பு திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் மேற்படி வாகனத்தை பிரதி மாதம் மறு உத்தரவு வரும் வரை 10ம்தேதிக்குள் வாகனத்தை ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காண்பித்து செல்லவேண்டும்.**

இந்த உத்தரவு, என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று **29.07.2026**–ம் தேதி பகரப்பட்டு, என் கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.29 19:04:44 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2(மு.கூ.பொ),**
**மேட்டூர்.**